இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம்: 10.8.1942 – முரசு: 83 – ஒலி: 93– திருவள்ளுவர் ஆண்டு 2055 – ஐப்பசி 26 – செவ்வாய்க்கிழமை 12 நவம்பர் 2024 – திருச்சி ★★ 10 பக்கங்கள் Established: 10.8.1942 - Volume: 83 - Issue 93 : Thiruvalluvar Year - 2055 - Ayppasi 26 - Tuesday 12 November 2024 - Trichy ★★ 10 Pages ₹ 5.00


## காலமெலாம் மக்கள் மனதில் நிலைத்திருப்பார் கலைஞர்!

# புளுகு மூட்டைகளை அவிழ்த்துவிடும் எடப்பாடிக்கு எந்நாளும் தோல்விதான்!

## விருதுநகரில் முதல்வர் மு.க.ஸ்டாலின் உறுதி!

**விருதுநகர், நவ. 12 -**

**காலமெலாம் மக்கள் மனதில் நிலைத் திருப்பார் கலைஞர் என்றும், புளுகு மூட்டைகளை அவிழ்த்துவிடும் எடப்பாடிக்கு எந்நாளும் தோல்விதான் என்றும் விருது நகரில் நடைபெற்ற நிகழ்ச்சியில் உரையாற்றுகையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உறுதிபடத் தெரிவித்தார்.**





தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (10.11.2024) விருதுநகர் மாவட்டம், விருதுநகர் வட்டம், கூரைகுண்டு கிராமத்தில் 7.67 ஏக்கர் பரப்பளவில், 77 கோடியே 12 இலட்சம் ரூபாய் செலவில் 6 தளங்களுடன் கட்டப்பட்டுள்ள விருதுநகர் மாவட்ட புதிய ஆட்சியர் அலுவலகத்திற்கான கட்டடத்தை திறந்து வைத்தார். இந்த நிகழ்ச்சியில், பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ. வேலு, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன், நிதி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வி.கணேசன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் மாணிக்கம் தாகூர், நவாஸ் கனி, திருமதி ராணி ஸ்ரீகுமார், சட்டமன்ற உறுப்பினர்கள் ஏ.ஆர்.ஆர்.சீனிவாசன், எஸ். தங்கபாண்டியன், ஏ.ஆர்.ஆர். ரகுராமன், வருவாய் நிர்வாக ஆணையர் / கூடுதல் தலைமைச் செயலாளர் ராஜேஷ் லக்கானி, பொதுப்பணித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் மங்கத் ராம் சர்மா, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை முதன்மைச் செயலாளர் திருமதி பெ.அமுதா, விருதுநகர் மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் வீ.ப. ஜெயசீலன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

விருதுநகர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தை திறந்து வைத்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:-

விருதுநகர் மாவட்டத்தின் புதிய ஆட்சியர் அலுவலகத்தைத் திறந்து வைத்து 40 ஆயிரம் நபருக்கு பட்டா வழங்கக்கூடிய இந்த மாபெரும் விழாவில் கலந்துகொண்டு உங்களையெல்லாம் சந்திக்கக்கூடிய வாய்ப்பைப் பெற்றமைக்கு நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்!

மருது சகோதரர்கள் போல இந்த மண்ணுக்கு தூணாக விளங்கக்கூடிய மாவட்டச் செயலாளர்கள் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன் அவர்களையும், தங்கம் தென்னரசு அவர்களையும் நான் மனதார பாராட்டுகிறேன், வாழ்த்துகிறேன். அந்த இருவருக்கும் மாவட்ட வளர்ச்சித் திட்டங்களுக்கு துணை நிற்கக்கூடிய மாவட்ட ஆட்சியர் ஜெயசீலன் உள்ளிட்ட அரசு அதிகாரிகளுக்கும் என்னுடைய வாழ்த்துகளையும், பாராட்டுக்களையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன.

விருதுநகர்! இந்தப் பெயரை சொன்னவுடன் ஒவ்வொரு தமிழரின் நெஞ்சிலும் நினைவுக்கு வருபவர், வீரத் தியாகி சங்கரலிங்கனார் அவர்கள்! மெட்ராஸ் ஸ்டேட் என்று அழைக்கப்பட்ட நம்முடைய தாய்நிலத்துக்கு தமிழ்நாடு என்று பெயர் சூட்ட வேண்டும் என்று உயிர்த்தியாகம் செய்தவர் சங்கரலிங்கனார் அவர்கள்!

### ஏராளமான தியாகச் சீலர்களை ஈன்றெடுத்த தமிழ்நாடு மண்!

இன்றைக்கு நாமெல்லாம் தமிழ்நாடு என்று பெருமையுடன் சொல்ல சங்கரலிங்கனார் அவர்களும், பேரறிஞர் அண்ணா அவர்களும் காரணம்! தமிழ்நாட்டு மண் ஏராளமான தலைவர்களை, தியாகச் சீலர்களை ஈன்றெடுத்திருக்கக்கூடிய மண்!

ஈரோடு – பகுத்தறிவு பகலவன் தந்தை பெரியாரைத் தந்தது!

காஞ்சி – பேரறிஞர் அண்ணாவை பெற்றெடுத்தது!

திருவாரூர் – முத்தமிழறிஞர் கலைஞரை உருவாக்கியது!

இந்த விருதுநகர் மண் – பெருந்தலைவர் காமராசரை நமக்கெல்லாம் வழங்கியது!

காமராசர் பெயரை சொன்னதுமே பலருக்கும் பல நினைவுகள் வரும். எனக்கு, என்னுடைய திருமணம் ஞாபகத்திற்கு வருகிறது... நினைத்துப் பார்க்கிறேன்... என்னுடைய திருமணத்துக்கு வரவேண்டும் என்று தலைவர் கலைஞர் அவர்கள் பெருந்தலைவர் காமராசர் அவர்களை இல்லத்திற்குச் சென்று நேரில் அழைத்தார். அப்போது அவர் உடல் நலிவுற்று இருந்தார்! பெருந்தலைவர் வரவேண்டும், உடல் நலிவுற்று இருந்த அவர் மேடை ஏறவேண்டும் என்று அவருடைய கார் மேடை மேல் வரக்கூடிய அளவிற்கு ஏற்பாடுகளை தலைவர் கலைஞர் அவர்கள் செய்தார்கள்!

பெருந்தலைவர் காமராசர் வந்தார்; என்னையும் – என் மனைவியையும் வாழ்த்தினார்கள்! இதை என்னால் ஒருபோதும் மறக்க முடியாது! பெருந்தலைவர் காமராசர் அவர்கள் மறைந்த போது, ஒரு மகன் போல, அவருடைய இறுதி நிகழ்ச்சிகளை நடத்தியவர், நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள்!

பெருந்தலைவர் காமராசர் அவர்களுக்கு, அரசு மரியாதையுடன் அடக்கம் – நினைவு மண்டபம் – கடற்கரைச் சாலைக்கு காமராசர் பெயர் – குமரியில் ‘காமராசர் மணிமண்டபம்’ – நெல்லையில் சிலை – காமராசரின் செயலாளராக இருந்த வைரவன் அவர்களுக்கு, பணி – வீடு ஒதுக்கீடு – காமராசரின் சகோதரி நாகம்மாளுக்கு முதலமைச்சர் பொது நிவாரண நிதியில் இருந்து நிதி உதவி – சென்னை உள்நாட்டு விமான நிலையத்துக்கு பெருந்தலைவர் காமராசர் பெயர் – பெருந்தலைவர் காமராசரின் பிறந்தநாளை, கல்வி வளர்ச்சி நாள் என்று அறிவித்து, பெருந்தலைவர் காமராசர் அவர்களைப் போற்றியவர் நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள்! இதையெல்லாம் தமிழ்நாடு என்றைக்கும் மறக்காது!

### ஏராளமான திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளது!

நாடு போற்றும் அந்த ‘சிவகாமியின் செல்வனை’ தந்த இந்த விருதுநகர் மாவட்டத்திற்கு திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சியில் ஏராளமான திட்டங்கள் செய்யப்பட்டிருக்கிறது. தாமிரபரணி கூட்டுக் குடிநீர் திட்டம் தொடங்கி.... சாஸ்தா கோவில் அணைக்கட்டு என்று பலவற்றை நான் சொல்லிக் கொண்டே போகலாம்!

மாவட்டங்கள் தோறும் நான் கள ஆய்வு செய்ய தொடங்கி இருக்கிறேன். நேற்று மாலை, நான் இந்த மாவட்ட அளவில், நம்முடைய திராவிட மாடல் ஆட்சியில் செய்யப்பட்டிருக்கின்ற, கடந்த மூன்றாண்டு திட்டங்களைப் பற்றி ஆய்வு செய்தேன். அப்போது, நடந்து கொண்டு இருக்கின்ற பணிகளைப் பற்றி கேட்டேன். அதில், முக்கியமான சிலவற்றை உங்களிடமும் பகிர்ந்து கொள்கிறேன்.

1,286 ஊரகக் குடியிருப்புகளுக்கு தாமிரபரணி ஆற்றை நீராதாரமாகக் கொண்டு கூட்டுக்குடிநீர் திட்டப் பணிகள் தொடங்கப்பட்டு இப்போது நடந்து கொண்டிருக்கிறது.

இருக்கன்குடி மாரியம்மன் திருக்கோயில் திருப்பணிகள் சிறப்பாக நடந்து கொண்டிருக்கிறது.

‘ஒருங்கிணைந்த ஆயத்த ஆடைகள் பூங்கா’ அமைக்கப்பட்டு வருகிறது.

‘அயன் கொல்லன் கொண்டான்’ என்ற புதிய தொழிற்பேட்டை அமைக்கப்பட இருக்கிறது.

அருப்புக்கோட்டை மருத்துவமனையை மாவட்ட தலைமையிட மருத்துவ மனையாக மேம்படுத்துகின்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

சிவகாசியில், அறிவுசார் மையம் வணிக வளாகம், பூங்கா, புதிய மாநகராட்சி அலுவலகக் கட்டடம் என்று பல பணிகள் நடந்து கொண்டு வருகிறது.

காரியாபட்டி மற்றும் மல்லாங்கிணறு பேரூராட்சிகளுக்கு கூட்டுக் குடிநீர்த் திட்டம் நடைமுறைக்கு வர இருக்கிறது.

இந்த மாவட்டத்தில் இருக்கின்ற 1,286 கிராமங்களுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம் 1,387 கோடியே 73 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

### விருதுநகரில் உயர்கல்வியில் அதிக அளவில் சேர்க்கை!

கடந்த 3 ஆண்டுகளில், விருதுநகர் மாவட்ட ஊராட்சிப் பகுதிகளில், 257 சாலைப் பணிகள் முடிக்கப்பட்டு, தற்போது, மேலும் 37 சாலைப்பணிகள் நடந்து கொண்டு வருகிறது. திருவில்லிப்புத்தூரில், புதிய பேருந்து நிலையம் அமைக்கப்பட இருக்கிறது. இதையெல்லாம், உட்கட்டமைப்பு திட்டங்கள் இன்னும் அதிகமாக இருக்கிறது. ஆய்வின் போது, இந்தப் பணிகள் எல்லாம், விரைந்து முடிக்க நான் அறிவுறுத்தி இருக்கிறேன்.

**தொடர்ச்சி 3ஆம் பக்கம்**

---

# பிரியங்கா காந்தியை ஆதரித்து ராகுல் காந்தி இறுதிக் கட்ட பிரச்சாரம்!

## வயநாடு தொகுதி இடைத் தேர்தல் பிரச்சாரம் ஓய்ந்தது!

*வயநாடு, நவ.12-*

*கேரள மாநிலம் வயநாடு தொகுதி இடைத் தேர்தலுக்கான பிரச்சாரம் நேற்றுடன் நிறைவடைந்தது. அத்தொகுதியில் காங்கிரஸ் சார்பில் போட்டியிடும் பிரியங்கா காந்தியை ஆதரித்து ராகுல் காந்தி நேற்று (11.11.2024) இறுதிக் கட்ட பிரச்சாரத்தில் ஈடுபட்டார்.*



*நடந்து முடிந்த மக்களவைத் தேர்தலில் ரேபரேலி மற்றும் வயநாடு தொகுதிகளில் போட்டியிட்டு வெற்றி பெற்ற ராகுல் காந்தி, தனது வயநாடு எம்.பி. பதவியை ராஜினாமா செய்தார். இதனால் அந்த தொகுதி காலியானதாக அறிவிக்கப்பட்ட நிலையில், நாளை (13 ஆம் தேதி) இடைத்தேர்தல் நடைபெற உள்ளது.*

*இதில் காங்கிரஸ் சார்பில் பிரியங்கா காந்தி போட்டியிடுகிறார். கடந்த சில நாட்களாக வயநாடு தொகுதியில் பிரியங்கா காந்தி தீவிர பிரச்சாரத்தில் ஈடுபட்டு வந்தார். அவருக்கு ஆதரவாக மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி மூத்த தலைவர்களுடன் பிரம்மாண்ட வாகனப் பேரணி நடத்தினார்.*

*இந்நிலையில், வயநாடு தொகுதி இடைத் தேர்தலுக்கான பிரச்சாரம் நேற்று மாலையுடன் நிறைவடைந்தது.*

*இதனையொட்டி, பிரியங்கா காந்தியை ஆதரித்து ராகுல் காந்தி நேற்று (11.11.2024) இறுதிக்கட்ட பிரச்சாரத்தில் ஈடுபட்டார்.*

---

## வயலில் வேலை பார்த்துக் கொண்டிருந்தவர்கள் மீது துப்பாக்கிச் சூடு!

# மணிப்பூரில் தொடரும் வன்முறை!

## துப்பாக்கிச் சூட்டில் பெண் ஒருவர் உயிரிழப்பு!

*இம்பால், நவ. 12 -*

*மணிப்பூர் மாநிலத்தில் பா.ஜ.க. ஆட்சி நடைபெற்று வருகிறது. இம்மாநிலத்தில் மெய்தி இனத்தவர் மற்றும் குக்கி பழங்குடியினர் இடையே கடந்த ஆண்டு பயங்கர மோதல் வெடித்தது. இந்த வன்முறையில் கலவரங்களும் தீவைப்புச் சம்பவங்களும் அரங்கேறின. இதில் மணிப்பூர் முழுவதும் பற்றி எரிந்தது. இதனால் பல்லாயிரக்கணக்கான மக்கள் முகாம்களில் தஞ்சமடைந்தனர். மேலும் பலர் அண்டை மாநிலங்களில் குடியேறினர். இந்த வன்முறை சம்பவங்களில் ஏராளமானோர் கொல்லப்பட்டுள்ளனர்.*

*எனினும் வன்முறை, இன்றளவும் முடிவுக்கு வரவில்லை. கடந்த வாரம் மெய்தி இனத்தைச் சேர்ந்த சிலர், கையில் துப்பாக்கி மற்றும் ஆயுதங்களுடன் ஜிரிபாம் மாவட்டத்தில் உள்ள ஜாரான் கிராமத்தில் பழங்குடி இனத்தவர்களின் வீடுகளுக்குள் புகுந்து அவர்களின் உடமைகள் மற்றும் பொருட்களை சூறையாடியதுடன், துப்பாக்கிச் சூடும் நடத்தியுள்ளனர். மேலும் அப்பகுதியில் உள்ள வீடுகளுக்கு தீவைத்து எரித்த வன்முறை கும்பல், பழங்குடி இனத்தைச் சேர்ந்த 3 குழந்தைகளின் தாயான ஒரு பெண்ணை கூட்டு பாலியல் வன்கொடுமை செய்து உயிருடன் எரித்துள்ளனர்.*

*தற்போது, பிஷ்ணுபூர் மாவட்டத்தில் வயலில் வேலை பார்த்துக் கொண்டிருந்த மெய்தி இனத்தவர் மீது வன்முறை கும்பல் துப்பாக்கிச் சூடு நடத்தியது. இந்த துப்பாக்கிச்சூட்டில் பெண் ஒருவர் உயிரிழந்தார். இதனால் அங்கு பதற்றம் மேலும் அதிகரித்துள்ளது.*